# தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு

# இரண்டாவது திருவழிபாடு ஆண்டு

# 2024-03-03

*(இன்றைய வாசகங்கள்:*

*விடுதலைப் பயண நூலிலிருந்து வாசகம்.* 20:1-17,

*பதிலுரைப்பாடல் திபா.* 19:7-10,

*திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்திலிரந்து வாசகம்.* 1:22-25,

*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 2: 13-25)

***திருப்பலி முன்னுரை***

*அன்பு இறைமக்களே, நம்மைப் படைத்து, நமது வாழ்க்கை நெறிகளை வகுத்தளித்த அன்புநிறை இறைவன் பெயரால் இன்றைய திருவழிபாட்டுக்கு உங்களை வரவேற்கிறோம். தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறாகிய இன்று நாம் சிறப்பிக்கும் திருவழிபாடு, இறைப்பற்றுடன் பிறரை அன்புசெய்து வாழ நமக்கு அழைப்பு விடுக்கிறது. கடவுளின் கட்டளைகளைக் கடைப் பிடித்து வாழ அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும், அவரது திருவுளத்திற்கு ஏற்றவாறு நடக்கவும், பாவச் சூழ்நிலைகளை விட்டு விலகவும் வேண்டும் என்பதை உணர்வோம். இயேசுவைப் போன்று சமூக அநீதிகளுக்கு சாட்டையடி கொடுக்கின்றவர்களாய் வாழும் வரம் வேண்டி, இத்திருப்பலியில் உருக்கமாக மன்றாடுவோம்.*

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

*திருச்சட்டத்தின் நிறைவாம் இறைவா,*

*மோசே வழியாக நீர் வழங்கிய பத்து கட்டளைகளும் திருச்சபையோரின் வாழ்க்கை நெறிகளாக தொடர்ந்திட உழைக்கும் ஆற்றலை, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவருக்கும் அளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*நீதியை நிலைநாட்டும் இறைவா,*

*உலக நாடுகளில் நிலவும் அநீதியான சட்டங்களும், அடக்குமுறைகளும் மறையவும், உமது கட்டளைகளுக்கு ஏற்ப உலகில் இறையன்பும், பிறரன்பும் செழிக்கவும் மக்களிடம் நல்லதோர் மனமாற்றத்தை உருவாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*வல்லமை மிகுந்தவராம் இறைவா,*

*தாங்களே அதிகாரம் மிக்கவர்கள் என்ற ஆணவத்தில் மிதக்கின்ற எங்கள் நாட்டின் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் உமது வல்லமையை உணர்ந்து, உமக்கும் மக்களுக்கும் பணி செய்பவர்களாய் மாற உதவ வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*

*வாழ்வை வழங்கும் தந்தையே இறைவா!*

*இதுவே தகுந்த காலம், இன்றே மீட்பு நாள் என்று அழைத்தீரே. நாங்கள் கிறிஸ்துவின் தூதர்களாய் இருக்கிறோம் என்பதை உணர்ந்து, இத்தவக்காலத்தை நன்கு பயன்படுத்திக் கடவுளோடு ஒப்புரவாகி, இயேசு கிறிஸ்துவிற்கு ஏற்படையவர்களாய் மாற நல்ல மனநிலையைத் தந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*அருட்செல்வங்களால் எங்களை ஆசீர்வதிக்கும் அன்புத்தந்தையே! எம் இறைவா!*

*எங்களை பராமரித்து பாதுகாத்த எம் பெரியவர்கள் இன்று ஆதரவின்றி, அனாதைகளாக்கப்பட்டு, தெரு ஓரங்களிலும், பேருந்து நிலையங்களிலும் முதியோர் இல்லங்களிலும் தனித்து விடப்பட்டு , அவர்கள் படும் வேதனைகள் தொடர் நிகழ்வாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. எனவே அவர்கள் உம் இறை இரக்கத்தினால்,பாதுகாப்புடன் வாழ, இத்தலைமுறையினர் பெரியவர்கள் மேன்மையை உணர்ந்து அவர்களை பாதுகாக்க தேவையான அருளை பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*எம்மை அரவணைக்கும் எம் இறைவா!*

*உலகிற்கு, உப்பாக ஒளியாக விளங்கிட, எம் குடும்பங்களை அர்ப்பணிக்கின்றோம். இன்று குடும்ப உறவுகளில் நிலவும் பிரச்சினைகள், வேறுபாடுகள், தனிகுடும்ப வாழ்வு, பெற்றோர்களால் தனித்து விடப்படுதல் போன்ற இவைகளிலிருந்து அனைத்தும் மாற்றம் பெற்று ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டு மன்னித்து வாழக்கூடிய நல்ல மனதினை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.*

*அனைவரையும் சாவினின்று காக்கும் தந்தையே இறைவா!*

*உலகில் இன்று வேகமாகப் பரவி வரும் எல்லாவிதமான கொடிய நோயிலிருந்தும் அனைவரையும் காத்து, நல்ல உடல் நலத்தை அவர்களுக்கு அளித்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.*

*ஞானத்தின் ஊற்றாம் இறைவா,*

*இவ்வுலகின் வாழ்க்கைச் சூழ்நிலைகளில் சிக்கி இறையன்பையும், பிறரன்பையும் புறக்கணித்து வாழும் மனிதர்கள், சமூக அநீதிகளுக்கு எதிரானவர்களாகவும் அமைதி ஏற்படுத்துபவர்களாகவும் மாற அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.*